ዓ.ር. 021

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Fisheries Departmental Test – II Part - A – Marine Fisheries (Without Books) | 054 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour　　　　Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.
2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.
3. In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.
4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.
5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display the remaining time as **Time Left**. At the beginning of exam, timer will show

1. The Fishing Licence shall be valid for a period __________ years.
மீன்பிடி உரிமம் __________ ஆண்டுகளுக்கு செல்திறன் மிக்கதாக இருக்கும்

(A) 3
(B) 4
(C) 5
(D) 6

2. Adjudicating Officer is an officer of the Fisheries Department not below the rank of
மீன் வளத்துறையின் தீர்ப்பு வழங்கும் அலுவலர் __________ தரத்திற்கு குறையாத அலுவலராக இருத்தல் வேண்டும்

(A) Deputy Director of Fisheries
மீன்வள துணை இயக்குநர்
(B) Assistant Director of Fisheries
மீன்வள உதவி இயக்குநர்
(C) Joint Director of Fisheries
மீன்வள இணை இயக்குநர்
(D) Inspector of Fisheries
மீன்வள ஆய்வாளர்

3. The life period of Fibre Glass Reinforced Plastic Vallam is years
கண்ணாடி நாரிழை நெகிழி வள்ளத்தின் ஆயுட்காலம் __________ ஆண்டுகள்.

(A) 5
(B) 10
(C) 15
(D) 25

4. The Driving Licence for Mechanized Fishing Vessel shall be valid for a period of __________ years.
இயந்திர மீன்பிடி படகினை ஒட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் __________ ஆண்டுகளுக்கு செல்திறன் பெற்றிருக்கும்.

(A) 2
(B) 3
(C) 4
(D) 5

5. The owner of the Mechanized Fishing vessel should provide the crew details to the __________ officer at each voyage.
இயந்திர மீன்பிடி படகின் உரிமையாளர் குழு உறுப்பினர் விவரங்களை ஒவ்வொரு கடற்பயணத்திற்கும் __________ அலுவலருக்கு அளிக்க வேண்டும்.

(A) Adjudicating Officer
தீர்ப்பு வழங்கும் அலுவலர்
(B) Appellate Officer
மேல்முறையீட்டு அலுவலர்
(C) Authorized Officer
அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்
(D) (A) and (B)
(A) மற்றும் (B)

6. Mechanized Fishing Vessel shall not be used for fishing __________ nautical miles from the shore.
கரையிலிருந்து __________ கடல் மைல்களுக்குள் இயந்திர மீன்பிடி படகை பயன்படுத்தி மீன்பிடிக்க கூடாது

(A) 3
(B) 4
(C) 5
(D) 6

7. Deep sea fishing vessel operating from the State shall leave from and return to be the notified place of berthing during the day hours between
மாநிலத்திலிருந்து இயக்கப்படும் ஆழ்கடல் மீன்பிடி படகுகள் __________ மணிக்குள் அறிவிக்கையிடப்பட்ட தங்குதளத்திலிருந்து புறப்பட்டு சென்று, திரும்பிட வேண்டும்.

(A) 04.00 hours and 14.00 hours
04.00 மணி முதல்14.00 மணி வரை
(B) 05.00 hours and 16.00 hours
05.00 மணி முதல் 16.00 மணி வரை
(C) 05.00 hours and 18.00 hours
05.00 மணி முதல் 18.00 மணி வரை
(D) 06.00 hours and 17.00 hours
06.00 மணி முதல் 17.00 மணி வரை

8. No Gill net should have a stretched mesh size of less than __________ milli meter.
செவுள் வலை இழுக்கப்பட்ட நிலையில் ________ மில்லி மீட்டருக்கு குறைவான கண்ணி அளவு கொண்டதாக இருக்க கூடாது.

(A) 15
(B) 25
(C) 26
(D) 27

9. No Trawl net should have a stretched mesh size of less than 40 mm at the ________
இழுவலைகளில் ________ இழுக்கப்பட்ட நிலையில் 40 மில்லி மீட்டருக்கு குறைவான கண்ணி அளவு கொண்டதாக இருக்க கூடாது.

(A) Wing
இறகு
(B) Throat
கழுத்து
(C) Belly
வயிறு
(D) Cod end
குறுகுமுனை

10. The artificial reefs shall be deployed area in the specified area for __________ by Government.
குறிப்பிடப்பட்ட பகுதியில் செயற்கை பவளப்பாறைகள் அரசால் __________ அமைக்கப்படும்.

(A) Stock depletion
மீன்வளத்தை அழிப்பதற்காக
(B) Over Fishing
அதிகப்படியான மீன்பிடிப்பதற்காக
(C) Stock enhancement
மீன்வளத்தை பெருக்கிடுவதற்காக
(D) Over exploitation
அதிக சுரண்டல்

11. Inspection officer of the Fisheries Department not below the rank of __________ of Fisheries.
மீன் வளத்துறையின் ஆய்வு அலுவலர் __________ தரத்திற்கு குறையாத அலுவலராக இருத்தல் வேண்டும்.

(A) Inspector of Fisheries
மீன்வள ஆய்வாளர்

(B) Sub Inspector of Fisheries
மீன்வள சார் ஆய்வாளர்

(C) Deputy Director of Fisheries
மீன்வள துணை இயக்குநர்

(D) Assistant Director of Fisheries
மீன்வள உதவி இயக்குநர்

12. The __________ officer conduct an enquiry into the matters mentioned in "the report of the Authorized officer.
அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் அளித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களில் __________ அலுவலர் விசாரணை நடத்துவார்.

(A) Adjudicating Officer
தீர்ப்பு வழங்கும் அலுவலர்

(B) Appellate Officer
மேல்முறையீட்டு அலுவலர்

(C) Authorized Officer
அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்

(D) (A) and (B)
(A) மற்றும் (B)

13. The chairman of District Level Management Advisory Committee in Fishing Harbour is
மீன்பிடி துறைமுக மாவட்ட அளவிலான நிர்வாக ஆலோசனை குழுவின் தலைவர்

(A) Assistant Director of Fisheries
மீன்வள உதவி இயக்குநர்

(B) Deputy Director of Fisheries
மீன்வள துணை இயக்குநர்

(C) Joint Director of Fisheries
மீன்வள இணை இயக்குநர்

(D) District Collector
மாவட்ட ஆட்சியர்

14. Fishing Harbour Management Committee shall be registered under
மீன்பிடி துறைமுகத்தின் நிர்வாக ஆலோசனை குழு __________ சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் வேண்டும்.

(A) Tamil Nadu Marine Fisheries Regulation Act, 1983
தமிழ்நாடு கடல்சார் மீன்பிடித்தலை ஒழுங்குபடுத்தும் சட்டம், 1983

(B) Tamil Nadu Marine Fishing Regulation Rules, 1983
தமிழ்நாடு கடல்சார் மீன்பிடித்தலை ஒழுங்குபடுத்தும் விதிகள், 1983

(C) Tamil Nadu Societies Registration Act, 1975
தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம், 1975

(D) Amendments of Tamil Nadu Marine Fisheries Regulation Rules, 2020
தமிழ்நாடு கடல்சார் மீன்பிடித்தலை ஒழுங்குபடுத்தும் திருத்தப்பட்ட விதிகள், 2020

15. The chairman of Fishing Harbour Management Committee in Fishing Harbour is
மீன்பிடி துறைமுகத்தின் நிர்வாக குழுவின் தலைவர்

(A) Assistant Director of Fisheries
மீன்வள உதவி இயக்குநர்

(B) Deputy Director of Fisheries
மீன்வள துணை இயக்குநர்

(C) Joint Director of Fisheries
மீன்வள இணை இயக்குநர்

(D) Both (A) and (C)
(A) மற்றும் (C)

16. The District level Management Advisory Committee shall meet once in _________ months.
___________ மாதத்திற்கு ஒரு முறை மாவட்ட அளவிலான ஆலோசனை குழு கூடவேண்டும்.

(A) 5
(B) 6
(C) 7
(D) 8

17. The quorum for a meeting of the district level Management Advisory Committee shall be _________ of the members.
மாவட்ட அளவிலான நிர்வாக குழுவிற்கான குறைவெண் வரம்பு _________ உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

(A) 1
(B) 1/2
(C) 1/3
(D) 1/5

18. The cabin and Hull of fishing vessel should be in _________ colour.
மீன்பிடி படகின் படகு அறை மற்றும் கூடு _________ நிறத்தில் இருத்தல் வேண்டும்.

(A) Orange
ஆரஞ்சு

(B) Pale green
வெளிர் பச்சை

(C) Blue
நீலம்

(D) Yellow
மஞ்சள்

19. Logistic model was developed by
லாஜிஸ்டிக் மாதிரி _________ ஆல் உருவாக்கப்பட்டது.

(A) Schaefer
ஸ்கேஃபர்

(B) Daniel Pauly
டேனியல் பாலி

(C) Gulland
குல்லான்ட்

(D) (A) and (B)
(A) மற்றும் (B)

20. Exploitation of a fish stock at right age is called as
மீன்களை உரிய வயதில் பிடித்தல் __________ என அழைக்கப்படுகிறது.

(A) Under fishing
குறைவான மீன்பிடிப்பு

(B) Over fishing
அதிகப்படியான மீன்பிடிப்பு

(C) Eumetric fishing
யூமெட்ரிக் மீன்பிடிப்பு

(D) Over exploitation
அதிக சுரண்டல்

21. Fish eggs with a small amount of yolk are called as
சிறிய அளவு மஞ்சட்கரு கொண்ட மீன்முட்டைகள் __________ என அழைக்கப்படுகிறது.

(A) Oligolecithal
ஒலிகோலிசித்தல்

(B) Alecithal
அலெசித்தல்

(C) Isolecithal
ஐசோலெசித்தல்

(D) Telolecithal
டீலோலெசித்தல்

22. Sorting and sizing of pearls is done by passing through __________ sieves.
முத்துக்களை அதன் அளவு வாரியாக பிரித்தெடுப்பது __________ சல்லடைகள் மூலம் செய்யப்படுகிறது.

(A) Brass
பித்தளை

(B) Silver
வெள்ளி

(C) Gold
தங்கம்

(D) Copper
செம்பு

23. Which one of the following is a fish?
பின்வருவனவற்றுள் எது மீன்?

(A) Sea horse
கடல் குதிரை

(B) Sea lion
கடல் சிங்கம்

(C) Sea pen
கடல் பேனா

(D) Sea urchin
கடல் அர்ச்சின்

24. __________ class of pearls has perfect sphere and lustre.
__________ வகை முத்துகள் நேர்த்தியான கோள வடிவம் மற்றும் பளபளப்பைக் கொண்டுள்ளன.

(A) Anatari
அனட்டரி

(B) Ani
அனி

(C) Kallipu
கல்லிப்பு

(D) Kural
குறள்

25. Fish has no
மீன்களுக்கு __________ இல்லை.

(A) Tail
வால்

(B) Head
தலை

(C) Neck
கழுத்து

(D) Trunk
தண்டு

26. In fishes respiration takes place by
மீன்களில் சுவாசம் __________ ஆல் நிகழ்கிறது.

(A) Gills, lungs, fins
செவுள், நுரையீரல், துடுப்பு

(B) Gills
செவுள்கள்

(C) Lungs
நுரையீரல்

(D) Gills and accessory respiratory organs
செவுள்கள் மற்றும் துணை சுவாச உறுப்புகள்

27. Lateral line system is present in
பக்கவாட்டு கோடு ________ ல் அமைந்துள்ளது.

(A) Marine mammal
கடல் பாலூட்டி

(B) Mollusc
மெல்லுடலிகள்

(C) Fish
மீன்கள்

(D) Crustacean
ஓட்டுடலிகள்

28. Fishing for Bombay duck is traditionally carried out by __________ net.
வங்காரவஸி மீன்கள் பாரம்பரியமாக __________ வலையை கொண்டு பிடிக்கப்படுகிறது.

(A) Trawl
இழுவலை

(B) Gill
செவுள் வலை

(C) Dol
டோல் வலை

(D) Siene
மடி வலை

29. Which is the most poisonous fish in the world?
உலகிலேயே அதிக நச்சுதன்மை உள்ள மீன் எது?

(A) Seer fish
வஞ்சரம் மீன்

(B) Puffer fish
பேத்தை மீன்

(C) Tuna
சூரை மீன்

(D) Mackerel
கானாங்கெளுத்தி மீன்

30. In sucker fish, the sucker is a modification of __________
உறிஞ்சு மீனில் __________ துடுப்பு உறிஞ்சு உறுப்பாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

(A) Ventral fin
அடிப்பக்க துடுப்பு

(B) Mouth
வாய்

(C) Gill slit
செவுள் பிளவு

(D) Dorsal fin
மேல்பக்க துடுப்பு

31. Ribbon fish also called as
சாவாளை மீன் __________ எனவும் அழைக்கப்படுகிறது.

(A) Sea fish
கடல் மீன்

(B) Sea hare
கடல் முயல்

(C) Hair tails
ஹேர் டெய்ல்ஸ்

(D) Star fish
நட்சத்திர மீன்

32. Respiratory pigment in fishes is
மீன்களில் காணப்படும் சுவாச நிறமி

(A) Haemoglobin
ஹீமோகுளோபின்

(B) Haemocyanin
ஹீமோசயனின்

(C) Erythrocyanin
எரித்ரோசயனின்

(D) Astaxanthin
அஸ்டாசாந்தின்

33. Most important function of kidney is
சிறுநீரகத்தின் முக்கியமான செயல்பாடு

(A) Excretion of nitrogenous waste
நைட்ரஜன் கழிவுகளை வெளியேற்றுதல்

(B) Maintaining salt and water balance
உப்பு மற்றும் நீர் சமநிலையை பராமரித்தல்

(C) (A) and (B)
(A) மற்றும் (B)

(D) Respiration
சுவாசம்

34. Principal organ for removal of Ammonia and urea
அம்மோனியா மற்றும் யூரியாவை அகற்றுவதற்கான முக்கிய உறுப்பு

(A) Dorsal fin
மேற்பக்க துடுப்பு

(B) Skin
தோல்

(C) Pectoral fin
பக்கவாட்டு துடுப்பு

(D) Gills
செவுள்

35. The instrument used to measure relative humidity is
ஈரப்பதத்தை அளவிட பயன்படும் கருவி __________ ஆகும்.

(A) Hygrometer
ஈரப்பதமானி

(B) Thermometer
வெப்பமானி

(C) Barometer
காற்றழுத்தமானி

(D) Anemometer
காற்று வேக அளவி

36. Terminal part of the intestine is called
குடலின் கடைசி பகுதி

(A) Duodenum
டியோடினம்

(B) Rectum
மலக்குடல்

(C) Fluem
ஃப்ளும்

(D) Small intestine
சிறுகுடல்

37. The tail fin is also known as
வால்துடுப்பு __________ எனவும் அழைக்கப்படுகிறது.

(A) Dorsal fin
மேற்பக்க துடுப்பு

(B) Anal fin
ஆனல் துடுப்பு

(C) Pectoral fin
பக்கவாட்டு துடுப்பு

(D) Caudal fin
காடல் துடுப்பு

38. Which fish is popularly known as *Hilsa* in India?
இந்தியாவில் எந்த மீன் ஹில்ஷா என அழைக்கப்படுகிறது?

(A) Indian shad
இந்திய ஷாட்

(B) Indian Tarpon
இந்திய டர்பன்

(C) Indian mackerel
கானாங்கெளுத்தி

(D) White bait
ஒயிட் பெயிட்

39. The air pressure is measured with the help of
காற்றழுத்தம் __________ கருவியின் உதவியுடன் அளவிடப்படுகிறது.

(A) Hygrometer
ஈரப்பதமானி

(B) Thermometer
வெப்பமானி

(C) Barometer
காற்றழுத்தமானி

(D) Anemometer
காற்று வேக அளவி

40. Which one of the following is a catadromous fish?
பின்வருவனவற்றுள் கேட்டாட்ரோமஸ் மீன் எது?

(A) Salmon
சால்மன்

(B) Hilsa
ஹில்சா

(C) Sardine
சாளை

(D) Eel
விலாங்கு

41. To which family do Tuna belong?
சூரை மீன் எந்த குடும்பத்தை சார்ந்தது?

(A) Cyprinidae
சிப்ரினிடே

(B) Scombridae
ஸ்கோம்ப்ரிடே

(C) Percidae
பெர்சிடே

(D) Salmonidae
சால்மோனிடே

42. Eyelids of fishes are
மீனின் கண் இமைகள்

(A) Movable
அசையும்

(B) (A) and (C)
(A) மற்றும் (C)

(C) Immovable
அசையாது

(D) Present
இருக்கும்

43. Anadromous fish migrates from

ஆனட்ரோமஸ் மீன் __________ லிருந்து இடம்பெயர்கிறது.

(A) River to estuary
ஆற்றிலிருந்து கழிமுகம்

(B) Sea to river
கடலிலிருந்து ஆறு

(C) River to sea
ஆற்றிலிருந்து கடல்

(D) Estuary to river
கழிமுகத்திலிருந்து ஆறு

44. Ichthyology is a study of
இட்ச்தியாலஜி __________ பற்றிய படிப்பு

(A) Amphibians
நிலநீர் வாழ்வன

(B) Fishes
மீன்கள்

(C) Birds
பறவைகள்

(D) Insects
பூச்சிகள்

45. *Fragilaria oceanica* in large number is the indication of abundance of
அதிகப்படியான பிராஜிலேரியா ஓசியானிகா __________ மிகுதியாக இருப்பதை குறிக்கிறது.

(A) Oil sardine
சாளை

(B) Mackeral
காணாங்கெளுத்தி

(C) Baracuda
ஊளி மீன்

(D) Anchovies
நெத்திலி

46. Climate is the term for the average atmospheric conditions over __________ periods of time.
காலநிலை என்பது சராசரி வளிமண்டல நிலைமைகள் __________ காலத்திற்கு இருப்பதை குறிக்கும் சொல் ஆகும்.

(A) Longer
நீண்ட

(B) Shorter
குறைவான

(C) Interrupted
குறுக்கிட்ட

(D) Frequent
அடிக்கடி

47. Intestine is long and coiled in
குடல் நீளமாகவும், சுருண்டும் __________ ல் காணப்படுகிறது.

(A) Carnivores
ஊனுண்ணி

(B) Herbivores
தாவர உண்ணி

(C) Omnivores
அனைத்துண்ணி

(D) Cannibalistic
மாமிச உண்ணி

48. The main food item of dugong is
கடல் பசுவின் முக்கிய உணவு __________ ஆகும்.

(A) Fish
மீன்

(B) Sea grass
கடல் புற்கள்

(C) Crustacean
ஓட்டுடலிகள்

(D) Mollusc
மெல்லுடலிகள்

49. El Nino current occurs off the coast of
எல்நினோ நீரோட்டம் __________ கரையில் காணப்படுகிறது

(A) Antarctica
அண்டார்ட்டிகா

(B) East Australia
கிழக்கு ஆஸ்திரேலியா

(C) North Sea
வடக்கு கடல்

(D) Peru
பெரு

50. Eutrophication is a phenomenon, where there is
ஊட்டஞ்செறிதல் __________ ஆல் உருவாகிறது.

(A) Excessive feeding by available fauna
விலங்கினங்கள் அதிகமாக உட்கொள்ளுவதால்

(B) Diversity of species high
இனங்களின் பன்முகத்தன்மை

(C) Overabundance of nutrients
ஊட்டச்சத்துகள் மிகுதியாக உள்ளதால்

(D) High sunlight penetration
சூரிய ஒளி அதிகமாக ஊடுருவுவதால்

51. Which areas in the oceans are rich in fish population?
கடலின் எந்த பகுதியில் மீன்கள் அதிகமாக காணப்படுகின்றன?

(A) Upwelling area
அப்வெல்லிங் பகுதி

(B) Pelagic region
கடல்பரப்பு பகுதி

(C) Benthic region
கடல் அடிப்பகுதி

(D) Demersal area
அடிமட்ட பகுதி

52. Animals which can tolerate wide range of salt concentration are called
பரந்த அளவிலான உப்பு செறிவைத் தாங்கக் கூடிய உயிரினங்கள் __________ என்று அழைக்கப்படுகிறது.

(A) Euryhaline
யூரிஹேலைன்

(B) Stenohaline
ஸ்டீனோஹேலைன்

(C) Oligohaline
ஒலிகோஹேலைன்

(D) Euryphagic
யூரிஃபேஜிக்

53. Periodic movement of animals from one place to another and back for breeding is called
இனபெருக்கத்திற்காக விலங்குகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அவ்வபோது நகர்தல் __________ என அழைக்கப்படுகிறது.

(A) Migration
இடம்பெயர்தல்

(B) Nataliy
பிறப்பு

(C) Mutualism
பரிமாற்ற வாழ்க்கை

(D) Commensalism
கூட்டுவாழ்க்கை

54. Organism living on the bottom is
கடலின் அடிப்பகுதியில் வாழும் உயிரினங்கள் __________ என அழைக்கப்படுகின்றன.

(A) Benthos
கடல் அடித்தள உயிரினங்கள்

(B) Neuston
காற்று/நீர் இடைமுகத்தில் வாழும் உயிரினங்கள்

(C) Nekton
நீந்தி வாழும் உயிரினங்கள்

(D) Plankton
மிதவை வாழிகள்

55. Ring shaped or horse – shoe shaped coral reefs is called
மோதிர வடிவிலான அல்லது குதிரை இலாட வடிவிலான பவளப்பாறைகள் __________ என அழைக்கப்படுகின்றன.

(A) Atolls
பவளப்பாறைகள் /பவளத்தீவு

(B) Fjords
பிஜொர்ட்ஸ்

(C) Barrier reef
தடுப்பு பவளத்திட்டு

(D) Fringing reef
விளிம்புப் பாறை

56. Which state has the longest coastline in India?
இந்தியாவில் எந்த மாநிலம் நீளமான கடலோரத்தை கொண்டுள்ளது?

(A) Tamil Nadu
தமிழ்நாடு

(B) Gujarat
குஜராத்

(C) Andhra Pradesh
ஆந்திர பிரதேசம்

(D) West Bengal
மேற்கு வங்காளம்

57. Highest point of a wave is called
அலையின் மிக உயர்ந்த புள்ளி ________ என அழைக்கப்படுகிறது.

(A) Crest
அலை முகடு

(B) Trough
அலை அகடு

(C) Current
நீரோட்டம்

(D) Heave
எழுதல்

58. Red tide is caused by
சிவப்பு அலை __________ ஆல் ஏற்படுகிறது.

(A) Bacteria
பாக்டீரியா

(B) Fungi
பூஞ்சை

(C) Diatom
டயாட்டம்

(D) Dinoflagellate
ஈகசை உயிரி

59. The rise and down movement of water due to gravitational pull between earth and moon is called
பூமிக்கும், சந்திரனுக்கும் இடையேயுள்ள ஈர்ப்பு விசையின் காரணமாக ஏற்படும் நீரின் எழுச்சி மற்றும் கீழ் இயக்கம் _________ என அழைக்கப்படுகிறது.

(A) Tide
ஓதம்

(B) Wave
அலை

(C) Current
நீரோட்டம்

(D) Ekman spiral
எக்மேன் சுழல்

60. Mussels have
மட்டிகள் __________ ஐ கொண்டிருக்கின்றன.

(A) Byssus thread
ஒட்டும் இழை நார்கள்

(B) Tentacle
உணர்கொம்புகள்

(C) Wings
சிறகுகள்

(D) Tube feet
குழாய் கால்கள்

61. Neritic zone extend up to
அண்மைக் கடல் பகுதி __________ வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

(A) 100 to 200 m
100 முதல் 200 மீட்டர் வரை

(B) 50 to 200 m
50 முதல் 200 மீட்டர் வரை

(C) 200 to 250 m
200 முதல் 250 மீட்டர் வரை

(D) 0 to 200 m
0 முதல் 200 மீட்டர் வரை

62. The time that is takes for two successive corresponding points on a wave to pass a given point is called
கொடுக்கப்பட்ட ஒரு புள்ளியை கடப்பதற்கு அலையின் இரண்டு அடுத்தடுத்த புள்ளிகள் எடுத்து கொள்ளும் நேரம் __________ என அழைக்கப்படுகிறது.

(A) Wave period
அலை காலம்

(B) Wave amplitude
அலை வீச்சு

(C) Tidal period
ஓத காலம்

(D) Tidal prism
ஓதப்பட்டகம்

63. __________ relationship between the abundance of oil sardine and mackerel.
கடலில் காணப்படும் / சாளை மற்றும் கானாங்கெளுத்தி மீன்களுக்கு இடையிலான உறவு

(A) Direct
நேரானது

(B) Inverse
தலைகீழானது

(C) (A) and (B)
(A) மற்றும் (B)

(D) Constant
மாறிலி

64. Indian National Centre for Information Services (INCOIS) predicts
கடல் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையம் __________ ஐ கணிக்கிறது.

(A) Mangrove
அலையாத்தி காடுகள்

(B) Island
தீவுகள்

(C) Potential fishing zones
சாத்தியமான மீன்பிடி மண்டலம்

(D) Corals
பவளப்பாறைகள்

65. The sacred chank is the shell of __________ mollusc.
புனித சங்கு என்பது __________ மெல்லுடலியின் ஓடு ஆகும்.

(A) *Perna*
*பெர்னா*

(B) *Crassostrea*
*க்ரஸாஸ்ட்ரியா*

(C) *Turbinella*
*டர்பினெல்லா*

(D) *Anadora*
*அனடோரா*

66. Sharks and their relatives are called
சுறாக்கள் மற்றும் அதனை சார்ந்தவை __________ என அழைக்கப்படுகின்றன

(A) Elasmobranch
குருத்தெலும்பு மீன்கள்

(B) Teleost
எலும்பு மீன்கள்

(C) Crustacean
ஓட்டுடலிகள்

(D) Mollusc
மெல்லுடலிகள்

67. The largest shark in the world is
உலகின் மிக பெரிய சுறா __________ ஆகும்.

(A) Bull shark
காளை சுறா

(B) Tiger shark
புலி சுறா

(C) Hammerhead shark
கொம்பன் சுறா

(D) Whale shark
திமிங்கல சுறா

68. Groupers comes under the family of
கலவா மீன் ________ சூடும்பத்தில் அடங்கும்.

(A) Clupeidae
க்ளுப்பிடே

(B) Engraulidae
எங்க்ராலிடே

(C) Serranidae
செறானிடே

(D) Percidae
பெர்சிடே

69. The sampling used to estimate total marine fish landings is
மொத்த கடல் மீன் பிடிப்பினை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் மாதிரி __________ ஆகும்.

(A) Cluster sampling
தொகுதி மாதிரி

(B) Stratified sampling
அடுக்கு மாதிரி

(C) Stratified multistage sampling
அடுக்கு பலநிலை மாதிரி

(D) Random sampling
சீரற்ற மாதிரி

70. Cage culture originated in
கூண்டு மீன்வளர்ப்பு __________ ல் உருவானது

(A) America
அமெரிக்கா

(B) Cambodia
கம்போடியா

(C) Philippines
பிலிபைன்ஸ்

(D) India
இந்தியா

71. The scientific name of silver belly is
காரல் மீனின் அறிவியல் பெயர்

(A) *Leiognathus*
லியோக்னாத்தஸ்

(B) *Sardinella*
*சார்டினெல்லா*

(C) *Stolephorus*
*ஸ்டோலிஃபோரஸ்*

(D) *Thynnus*
*துன்னஸ்*

72. __________ are nursery grounds for commercially important penaeid species.
________ வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இறால் இனங்களுக்கு நாற்றங்கால் மைதானமாக செயல்படுகிறது.

(A) Estuary
கழிமுகம்

(B) River
ஆறு

(C) Sea
கடல்

(D) Lake
ஏரி

73. The scientific name of Deep Sea lobster is
ஆழ்கடல் சிங்கி இறாலின் அறிவியல் பெயர்

(A) *Penaeus monodon*
*பினேயஸ் மோனோடான்*

(B) *Puerulus sewelli*
*புயூருலஸ் சிவெல்லி*

(C) *Penaeus vannamei*
*பினேயஸ் வனாமி*

(D) *Engraulis ringens*
*எங்க்ராலிஸ் ரிஞ்சென்ஸ்*

74. __________ type of Cage is used in the sea.
__________ வகை கூண்டுகள் கடலில் பயன்படுத்தப்படுகின்றன.

(A) Rectangular
செவ்வகம்

(B) Square
சதுரம்

(C) Trapezoidal
சரிவகம்

(D) Circular
வட்டம்

75. Scientific name of Three Spotted crab is
முக்கண் நண்டின் அறிவியல் பெயர்

(A) *Leiognathus*
*லியோக்னாத்தஸ்*

(B) *Sardinella*
*சார்டினெல்லா*

(C) *Stolephorus*
*ஸ்டோலிஃபோரஸ்*

(D) *Portunus Sanguinolentus*
*போர்சுனஸ் சாங்குய்னோலென்டஸ்*

76. Mantis shrimp are called
கடல் வெட்டுக்கிளிகள் ________ என அழைக்கப்படுகின்றன.

(A) White shrimp
வெள்ளை இறால்

(B) Squilla
ஸ்குவில்லா

(C) Tiger shrimp
புலி இறால்

(D) Red tail shrimp
சிவப்பு வால் இறால்

77. __________ is the largest molluscan.
மிக பெரிய மெல்லுடலி ________ ஆகும்.

(A) Crustacean
ஓட்டுடலிகள்

(B) Teleost
எலும்பு மீன்கள்

(C) Gastropod
வயிற்றுக்காலிகள்

(D) Elasmobranch
குருத்தெலும்பு மீன்கள்

78. Squid has
ஊசிக்கணவாய் ________ ஐ கொண்டிருக்கிறது.

(A) Gladius or Squid Pen
க்ளாடியஸ்/கணவாய் பேனா

(B) Cuttle bone
கணவாய் தோடு

(C) Bone
எலும்பு

(D) Spine
முள்

79. Scientific name of Top shell is
மேல்வடிவ நத்தையின் அறிவியல் பெயர்

(A) *Turbinella*
*டர்பினெல்லா*

(B) *Trochus*
*ட்ரோக்கஸ்*

(C) *Bulla*
*புல்லா*

(D) *Oliva*
*ஒலிவா*

80. Skin diving is the most important method for collecting
தோல் குளித்தல் என்பது ________ ஐ சேகரிப்பதற்கான மிக முக்கியமான முறையாகும்.

(A) Bilvalve
இருவோட்டுடலி

(B) Cuttle fish
கணவாய்

(C) Squid
பீலிக்கணவாய்

(D) Chanks
சங்கு

81. ________ is rearing of aquatic organisms under controlled or semi controlled conditions in the coastal and offshore waters.
கடலோர மற்றும் கரையோர பகுதிகளில் கடல் உயிரினங்களை கட்டுப்படுத்தப்பட்ட அல்லது பகுதி கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் வளர்ப்பது ________ ஆகும்.

(A) Aquaculture
மீன்வளர்ப்பு

(B) Pen culture
பென் வளர்ப்பு

(C) Mariculture
கடல் உயிரி வளர்ப்பு

(D) Cage culture
கூண்டு வளர்ப்பு

82. An example of brown seaweed is
பழுப்பு கடற்பாசிக்கு எடுத்துக்காட்டு ________ ஆகும்.

(A) *Sargassum*
*சர்காசம்*

(B) *Gracilaria*
*க்ரேசில்லேரியா*

(C) *Gelidiella*
*ஜெலிடியெல்லா*

(D) *Ulva*
*உல்வா*

83. Indian marine pearl oyster is
இந்திய கடல் முத்துசிப்பி என்பது

(A) *Crassostrea madrasensis*
க்ரசாஸ்ட்ரியா மட்ராஸென்ஸிஸ்

(B) *Perna viridis*
பெர்னா விரிடிஸ்

(C) *Perna indica*
பெர்னா இண்டிகா

(D) *Pinctada fucata*
பிங்க்டடா ஃப்யுகேட்டா

84. Process in which plants used to remove toxic or heavy metals from soil is called
மண்ணிலிருந்து நச்சு அல்லது கனஉலோகங்களை அகற்றுவதற்காக தாவரங்களை பயன்படுத்தும் முறை ________ என அழைக்கப்படுகிறது.

(A) Phytoextraction
தாவர பிரித்தெடுத்தல்

(B) Bio extraction
உயிர் பிரித்தெடுத்தல்

(C) Bio remediation
உயிர் மறுசீரமைப்பு

(D) Bio augmentation
உயிர் பெருக்கம்

85. In which year, Code of conduct for responsible fisheries was formed by Food and Agriculture Organization?
பொறுப்பான மீன்பிடிப்பிற்கான நடத்தை விதிகள், உணவு மற்றும் விவசாய அமைப்பால் எப்போது கொண்டுவரப்பட்டது?

(A) 1995
(B) 1990
(C) 1980
(D) 2000

86. Closed season for East coast is from
கிழக்கு கடற்கரை பகுதியில் மீன்பிடி தடைக்காலம் எது?

(A) April 1 – June 1
ஏப்ரல் 1 முதல் ஜூன் 1 வரை

(B) June 1 – July 15
ஜூன் 1 முதல் ஜூலை 15 வரை

(C) April 15 – June 14
ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை

(D) July 1 – September 1
ஜூலை 1 முதல் செப்டம்பர் 1 வரை

87. Coastal Aquaculture Authority Act came in ________ year.
கடலோர மீன் வளர்ப்பு ஆணைய சட்டம் எந்த ஆண்டு கொண்டு வரப்பட்டது?

(A) 2000
(B) 2005
(C) 1995
(D) 2010

88. Fisheries beyond territorial waters is the subject of
பிராந்திய நீர்நிலைகளுக்கு அப்பாற்பட்ட மீன்வளம் என்பது __________ அரசாங்கத்தின் பொருள் ஆகும்.

(A) State government
மாநில அரசு

(B) Indian Ocean tuna commission
இந்திய பெருங்கடல் சூரைமீன் ஆணையம்

(C) Union government
ஒன்றிய அரசு

(D) Food and Agriculture Organization
உணவு மற்றும் விவசாய அமைப்பு

89. Fisheries within territorial waters is the subject of
பிராந்திய நீர்நிலைகளுக்குட்பட்ட மீன்வளம் என்பது ________ அரசாங்கத்தின் பொருள் ஆகும்

(A) State government
மாநில அரசு

(B) Indian Ocean tuna commission
இந்திய பெருங்கடல் சூரைமீன் ஆணையம்

(C) Union government
ஒன்றிய அரசு

(D) Food and Agriculture Organisation
உணவு மற்றும் விவசாய அமைப்பு

90. The nacre of pearl oyster is __________ in color
முத்துச் சிப்பியின் நேக்கர் __________ நிறத்தில் இருக்கும்.

(A) Yellow
மஞ்சள்

(B) Red
சிவப்பு

(C) Pearly white
முத்து வெள்ளை

(D) Green
பச்சை

91. Murari committee is for
முராரி குழு எதற்காக கொண்டு வரப்பட்டது?

(A) Pelagic fishing policy
கடல் பரப்பு மீன்பிடி கொள்கை

(B) Marine Fishing Policy
கடல் சார் மீன்பிடி கொள்கை

(C) Deep sea fishing policy
ஆழ்கடல் மீன்பிடி கொள்கை

(D) Demersal fishing policy
கடல் அடிமட்ட மீன்பிடி கொள்கை

92. Merchant Shipping Act came in __________ year
வணிக கப்பல் சட்டம் எப்போது கொண்டு வரப்பட்டது?

(A) 1958
(B) 1950
(C) 1945
(D) 1975

93. Exclusive Economic Zone extends upto __________ Nautical miles from the base line
பிரத்தியேக பொருளாதார மண்டலம் அடிப்படை __________ கோட்டிலிருந்து கடல் மைல்கள் வரை நீண்டுள்ளது

(A) 100
(B) 200
(C) 250
(D) 150

94. Maritime zones of India act (1981) is for
இந்தியாவின் கடல்சார் மண்டலங்கள் சட்டம் (1981) __________ க்காக கொண்டுவரப்பட்டது.

(A) Regulations of fishing by foreign vessel
வெளிநாட்டு கப்பல்கள் மூலம் மீன்பிடித்தலை ஒழுங்குப்படுத்துதல்

(B) Regulations of fishing by mechanized vessel
இயந்திரமயமாக்கப்பட்ட படகுகள் மூலம் மீன்பிடித்தலை ஒழுங்குப்படுத்துதல்

(C) Regulations of fishing by native vessel
சொந்த படகுகள் மூலம் மீன்பிடித்தலை ஒழுங்குப்படுத்துதல்

(D) Regulations of fishing by deep sea vessel
ஆழ்கடல் கப்பல்கள் மூலம் மீன்பிடித்தலை ஒழுங்குப்படுத்துதல்

95. Coastal regulation zone act came in __________ year
கடலோர ஒழுங்குமுறை மண்டல சட்டத்தின் ஆண்டு

(A) 1990
(B) 1992
(C) 1993
(D) 1991

96. Territorial waters extends upto __________ Nautical miles from the base line
பிராந்திய நீர்நிலைகள் அடிப்படை கோட்டிலிருந்து __________ கடல் மைல்கள் வரை நீண்டுள்ளது.

(A) 12
(B) 10
(C) 24
(D) 20

97. Which of the following is a pelagic resource?
கீழ்கண்டவற்றுள் கடல் பரப்பு மீன்வளம் எது?

(A) Oil sardines
சாளை மீன்கள்

(B) Flat fish
தட்டை மீன்கள்

(C) Grouper
கலவா மீன்கள்

(D) Mackerel
கானாங்கெளுத்தி மீன்கள்

98. __________ seaweed is commercially farmed in the Palk Bay region of Tamil Nadu.
__________ கடற்பாசி தமிழ்நாட்டின் பால்க் வளைகுடா பகுதியில் வணிக ரீதியாக வளர்க்கப்படுகிறது.

(A) *Sargassum*
சர்காசம்

(B) *Gracilaria*
க்ரேசில்லேரியா

(C) *Kappaphycus*
கப்பா ஃபைகஸ்

(D) *Ulva*
உல்வா

99. Example of non-selective fishing method is
தேர்ந்தெடுக்கப்படாத மீன்பிடி முறையின் எடுத்துக்காட்டு __________ ஆகும்.

(A) Gill net.
செவுள் வலை

(B) Long line
தூண்டில்

(C) Trawl net.
இழுவலை

(D) (A) and (B)
(A) மற்றும் (B)

100. __________ has been celebrated for its pearl fishery.
__________ மாவட்டம் முத்துக் குளித்தலுக்கு பெயர் பெற்றது

(A) Madurai
மதுரை

(B) Chennai
சென்னை

(C) Dindugal
திண்டுக்கல்

(D) Tuticorin
தூத்துக்குடி